# வருடாந்த செயற்றிறன் அறிக்கை
# 2025

## கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்

**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**

# 2025 ம் வருடத்திற்கான வருடாந்த செயற்றிறன் அறிக்கை

# கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்

# செலவினத் தலைப்பு இலக்கம் 280


01. அத்தியாயம் - நிறுவன விபரம் / செயற்படுத்தலின் சுருக்கம்

02. அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

03. அத்தியாயம் - ஒட்டுமொத்த வருடாந்த நிதிச் செயற்பாடு

04. அத்தியாயம் - செயற்றிறன் குறிகாட்டிகள்

05. அத்தியாயம் - நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்து கொள்வதற்கான செயற்றிறன்

06. அத்தியாயம் - மனிதவள விபரம்

07. அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை

# அத்தியாயம் 01 - நிறுவன விபரம் / நிர்வாகச்சுருக்கம்

## 1.1 அறிமுகம்

பொது முதலீட்டின் வினைத்திறனான மற்றும் உச்ச பயன்பாட்டினை உறுதி செய்வதற்காக, ஒப்புக் கொள்ளப்பட்ட செலவு மற்றும் கால எல்லைக்குள் நிரல் அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களினால் செயற்படுத்தப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்சித்திட்டங்களில் இருந்து விரும்பிய முடிவுகளை அடைவதற்கு விசேட கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். மேலும், துல்லியமான கண்காணிப்பு செயல்முறை மூலம், கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் செயற்படுத்தலின் போது எழும் தடைகள் மற்றும் சிக்கல்களைத் நீக்குவது குறித்து ஆராய்ந்து தகவல்களுடான தீர்மானங்களை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிக்கையிட முடியும். இந் நோக்கங்களை அடைவதனை உறுதிசெய்வதற்காக, கருத்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்களை சுமூகமாக செயற்படுத்துவற்காக கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினால் மேற்பார்வை, ஆலோசனை மற்றும் வசதிகள் வழங்கப்படுகின்றது.

பொதுத்துறையில் மதிப்பீட்டு கலாச்சாரத்தை உட்செலுத்துவதற்கு தேசிய மதிப்பீட்டு கொள்கைக் கட்டமைப்பை செயற்படுத்துவதற்கும் தேவையான தொழில்நுட்ப ஆதரவை வழங்குவதில் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம், கருத்திட்ட மதிப்பீட்டிற்கான மையப் புள்ளியாகச் செயற்படுகின்றது. மேலும் பொது முதலீடுகளின் உச்ச பயன்பாட்டை உறுதிசெய்வதற்காக, மதிப்பீட்டு முடிவுகள் மற்றும் சரியான திட்டமிடல், தீர்மானமெடுத்தல் மற்றும் வள ஒதுக்கீடு ஆகியவற்றிற்கான பரிந்துரைகளைக் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திக்களத்தினால் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது.

2025 ஆம் ஆண்டில், பொது நிதி முகாமைச் (PFM) சட்டத்தின் மூலம் அமைச்சரவையினால் நிறுவப்பட்ட பொது முதலீட்டு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் குழுவின் (PIMEC) மூலம் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு மற்றும் சான்றுகளின் அடிப்படையில் தீர்மானங்களினை வலுப்படுத்த திணைக்களமானது பல தந்திரோபாய வழிமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. அத்துடன், அனைத்து அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்திறனை மதிப்பாய்வு செய்வதற்கும் செயற்படுத்துவதில் உள்ள தடங்கல்கள் தீர்ப்பதற்கும், அமைச்சரவை, ஒருங்கிணைந்த காலாண்டு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் (IQPRMs) என்ற புதிய வழிமுறைக்கு அங்கீகாரமளித்ததுள்ளதுடன், பௌதீக மற்றும் நிதி முன்னேற்றத்தை குறித்த காலத்திற்குள் சரிசெய்வதுடன், அதனை முறையாக மதிப்பிடுவதற்கும், வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை செயற்படுத்துவதற்கும் வழிவகுத்துள்ளது. மேலும் நிரல் அமைச்சுக்களின் பெறுபேற்று அடிப்படையிலான முகாமைத்துவத்தினை வலுப்படுத்த, அமைச்சு பெறுபேற்று கட்டமைப்புகள் (MRFs) அறிமுகப்படுத்தப்பட்டதுடன், வரவு செலவுத் திட்டங்களின் செயற்றிறன் மற்றும் செயற்படுத்தல் நிலையை கண்காணிக்க கட்டமைக்கப்பட்ட மாதாந்த மீளாய்வுக் கூட்டங்கள் மூலம் கண்காணிக்கப்படுவதுடன், இது சகல கண்காணிப்பு கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

மேலும், ஒவ்வொரு நிரல் அமைச்சுக்களிலும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டிற்கு (M&E) பொறுப்பான பிரதான பணியாளர்களை ஒன்றிணைத்தல், குழுப்பணியை ஊக்குவித்தல், அறிவைப் பகிர்ந்துகொள்ளுதல் மற்றும் பொதுத்துறை முழுவதும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு முறைமைகள் மற்றும் பயன்பாடுகளை கூட்டாக மேம்படுத்தல் போன்றவற்றிற்காக இங்கு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டிற்கான தேசிய பணிக்குழு நிறுவப்பட்டுள்ளது. அத்துடன், 2025 ஆம் ஆண்டில் இம்முயற்சிகள் பொது முதலீட்டு முகாமைத்துவத்தின் செயற்றிறன், விளைதிறன் மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதற்கும், தீர்மானம் மேற்கொள்பவர்களிற்கு சரியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சரியான நேரத்தில்

நம்பகரமான தகவல்களை வழங்குவதற்கும், வளங்களை உச்சபயன் பெறும் முறையில் ஒதுக்கவும், அபிவிருத்தியினை அதிகரிக்கவும் பங்களித்துள்ளன.

## 1.2 நிறுவனத்தின் தூரநோக்கு பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்க்ள்

### தூரநோக்கு

செயற்றிறனான அபிவிருத்தியினை நோக்கிய பயணம்

### பணிக்கூற்று

எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி பெறுபேறுகளின் உருவாக்கங்களை உறுதிப்படுத்துவதற்காக அனைத்து அபிவிருத்தி கருத்திட்டங்களினதும் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் செயற்படுத்தும் நிறுவனங்களுக்கு ஆலோசனைகளை வழங்குதல்.

### குறிக்கோள்

வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதனூடாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கால எல்லை மற்றும் செலவின மதிப்பீட்டிற்குள் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்களின் பெறுபேறுகளின் உருவாக்கத்தினை அதிகரித்தல்.

இந்நோக்கங்களை அடைய, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்கள் மூலம் நிதியளிக்கப்படும் பொது முதலீட்டு கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை சீராகவும் சரியான நேரத்தில் செயல்படுத்துவதை உறுதி செய்வதற்காககவும், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினால் மூலோபாய கண்காணிப்பு, தொழில்நுட்ப வழிகாட்டுதல், ஒருங்கிணைப்பு மற்றும் வசதிகளை வழங்குகின்றது. கட்டமைக்கப்பட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு ஏற்பாடுகள், முன்னேற்ற மதிப்பாய்வு பொறிமுறைகள் மற்றும் நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு ஊடாக, பொது முதலீடுகளில் செயற்றிறனை மேம்படுத்துதல், பொறுப்புக்கூறுதலினை வலுப்படுத்துதல் மற்றும் பணத்திற்கான மதிப்பை அதிகரித்தல் போன்றவற்றிற்கு திணைக்களம் பங்களிக்கிறது.

## 1.3 பிரதான தொழிற்பாடுகள்

1. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதியீட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் தகவல்களை சேகரித்தல், ஆய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல்.
2. பாரிய மற்றும் பெரிய அளவிலான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்து அமைச்சரவைக்கு அறிக்கையிடுதல்.
3. தேசிய செயற்பாட்டு மையத்தினூடாக பாரிய அளவிலான அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் பிரச்சினைகளை தீர்த்தல்.
4. வெளிநாட்டு நிதியீட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்விற்காக அபிவிருத்திப் பங்காளர்களுக்கு வசதிகளை வழங்குதல்.
5. தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டு நிதியுதவியுடனான கருத்திட்டங்களின் பெறுபேறுகளை அடைந்துகொள்வதன் மூலம் முன்னேற்றத்தை உறுதிபடுத்துதல் மற்றும் நிதியுதவி வழங்கும் நிறுவனங்களுக்கு அக்கடன் தவணைகளை தீர்த்துக்கொள்ளக் கூடிய வகையில் கருத்திட்டங்களின் செயற்பாட்டு முன்னேற்றங்களை உறுதிப்படுத்துதல்.
6. தேசிய மதிப்பீட்டு கொள்கையை அமுல்படுத்துவதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுத்தல்.
7. பல்வேறு தரப்பினரதும் வேண்டுகோள்களுக்கமைய கருத்திட்டங்களை மதிப்பிடல் மற்றும் மதிப்பாய்வு மேற்கொள்ளுதல் மற்றும் அதனூடாக திட்டமிடல் செயற்பாடுகளுக்கு பரிந்துரைகளை வழங்குதல்.
8. கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்ற அறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் அபிவிருத்தி தகவல்களை வழங்குதல்.

## 1.4 நிறுவன கட்டமைப்பு (இணைப்பு - 1)

## 1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

12 தொழில்நுட்ப பிரிவுகள் மற்றும் 02 துணைப்பிரிவுகள் உள்ளடங்கிய கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது, பணிப்பாளர் நாயகம் மற்றும் ஐந்து மேலதிக பணிப்பாளர் நாயகங்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் பின்வருமாறு கட்டமைக்கப்பட்டுள்ளது.

### திணைக்களத்தின் தொழில்நுட்ப பிரிவு

i. சமூக பாதுகாப்பு, சுகாதாரம், தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்

ii. கல்வி, உயர் கல்வி, திறன் அபிவிருத்தி

iii. கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள்

iv. பெருந்தோட்ட மற்றும் கடற்றொழில்

v. நீர்ப்பாசனம் மற்றும் காணி

vi. தொழிலாளர், இளைஞர் மற்றும் விளையாட்டு, வர்த்தகம், சுற்றுலா

vii. சுற்றாடல் மற்றும் வனவிலங்குகள், அனர்த்த முகாமைத்துவம், கடலோர பாதுகாப்பு

viii. நகர்ப்புறம் மற்றும் தாழ்நில அபிவிருத்தி, வீடமைப்பு

ix. நீர் மற்றும் சுகாதாரம்

x. போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள், துறைமுகங்கள் மற்றும் வீதிகள்

xi. சக்தி மற்றும் வலுசக்தி

xii. பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், வெகுசன ஊடகம், சமயம், கலாச்சாரம், உள்ளூராட்சி அமைச்சு, பாதுகாப்பு, நீதி மற்றும் சிறைச்சாலைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி

### திணைக்களத்தின் துணைப் பிரிவு

i. நிர்வாகம்

ii. நிதி

# அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் இலக்கு

## 2.1 அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல்.

2024 ஆம் ஆண்டின் பொது நிதி முகாமைச் (PFM) சட்ட இல 44 இன்படி அனைத்து பொது முதலீடுகளையும் கண்காணித்தல், பாரிய மற்றும் பெரிய அளவிலான கருத்திட்டங்களிற்கான காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளினை அமைச்சரவையில் சமர்ப்பித்தலினை கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது மேற்கொண்டு வருகின்றது. மேலும் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம், இடர் மதிப்பீடு மற்றும் பிரச்சினைகளினை முகாமை செய்தலுடன் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் நோக்கங்களுடன் இணக்கத்தினைப் பேணுதல் ஆகியவை இக் கண்காணிப்பினுள் உள்ளடங்கும். கருத்திட்டத்தின் செயற்றிறனின் நிலையானது முன்னேற்றம், காலக்கேடு, செலவு முகாமைத்துவம், மற்றும் இடர் தணிப்பு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் வர்ணக்குறியீடு முறையைப் பயன்படுத்தி வகைப்படுத்தப்படுகின்றது. இது சான்றுகள் அடிப்படையிலான தீர்மானங்களினையும் சரியான நேரத்தில் திருத்த நடவடிக்கைகளினை மேற்கொள்ள உதவுகின்றது.

2025 ஆம் ஆண்டில், அனைத்து அமைச்சுக்களின் கீழ் செயற்படுத்தப்பட்ட அனைத்து பிரிவுகளிலும் 200 க்கும் அதிகமான பாரிய மற்றும் பெரிய அளவிலான கருத்திட்டங்களை கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது கண்காணித்தது. மேலும் திணைக்களத்தினால், 2024 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளையும், 2025 ஆம் ஆண்டின் முதல், இரண்டாவது, மூன்றாவது காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளையும் அமைச்சரவையின் பரிந்துரைகளுடன் சமர்ப்பிக்ககூடியதாகக் காணப்பட்டது.

2025 ஆம் ஆண்டில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிமூலங்களினைப் பயன்படுத்தி பல்வேறு நிரல் அமைச்சுக்களின் கீழ் 216 பாரிய மற்றும் பெரிய அளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் அக் கருத்திட்டங்களின் முன்னேற்றமானது, சம்மந்தப்பட்ட அமைச்சுக்களிடம் இருந்து மாதந்தோறும் சேகரிக்கப்பட்டது. அத்துடன் இப் பாரிய மற்றும் பெரிய அளவிலான கருத்திட்டங்களில், 114 உள்நாட்டு நிதி மூலத்தினாலும், 102 வெளிநாட்டு நிதி மூலத்தினாலும் நிதியளிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.1 : அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல்**

| நிதி மூலம் | கருத்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| உள்நாட்டு நிதி (GoSL) | 111 |
| உள்நாட்டு கடன் (உள்நாட்டு வங்கிக் கடன்) | 03 |
| **உள்நாட்டு நிதியின் கீழ் உள்ள மொத்த கருத்திட்டங்கள்** | **114** |
| வெளிநாட்டு கடன் | 73 |
| வெளிநாட்டு உதவி | 29 |
| **வெளிநாட்டு நிதியின் கீழ் உள்ள மொத்த கருத்திட்டங்கள்** | **102** |
| **மொத்த கருத்திட்டங்கள் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி)** | **216** |

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) தொழில்நுட்ப உதவியுடன் மற்றும் பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் விதிகளிற்கு இணங்க, பொது முதலீட்டு நிர்வாகத்திற்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செயன்முறையை வலுப்படுத்த கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினால் அது தொடர்பான ஒழுங்குமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டன.

## 2.2 கள கண்காணிப்புக்கள்

முன்னேற்ற மீளாய்வுச் செயன்முறையின் போது அடையாளம் காணப்பட்ட சில கருத்திட்டங்களில் தற்போதுள்ள பிரச்சினைகளிளைத் தீர்ப்பதில் சிறப்புக் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வகையில் கருத்திட்டங்களின் உண்மையான நிலையினை உறுதிப்படுத்துவதற்கு நிரல் அமைச்சுக்கள் வழங்கும் மாதாந்த மற்றும் காலாண்டு அறிக்கைகள் மற்றும் பங்குதாரர்களுடனான கருத்திட்ட செயற்றிறன் கூட்டங்கள் என்பன மாத்திரம் போதாமையினால், கள கண்காணிப்புகள் மூலம் மேற்கொள்ளப்படும் அவதானிப்புகள் மிகவும் முக்கியமானவையாகக் காணப்படுகின்றது.

மேலும் இது கீழ்மட்டத்தில் நடைபெறும் செயற்பாடுகள், மற்றும் அறிக்கையிடப்பட்ட முன்னேற்றத்தினை உறுதி செய்யும் ஒரு பொறிமுறையாகும். அறிக்கைகள் மூலம் கண்டறியப்படாத சவால்கள் மற்றும் செயற்பாட்டு யதார்த்தங்களை நிகழ்நேர அவதானிப்புக்கு இவை அனுமதிக்கின்றன. இத் திணைக்களம் ஒவ்வொரு துறையின் கீழும் ஒரு களப் பயணத் திட்டத்தினை ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் தயாரிக்கின்றது. அதன்படி 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த துறை சார்ந்த களப் பயணத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. மேலும் அதிக தாக்கத்தினை ஏற்படுத்தும் மற்றும் அதிக ஆபத்துள்ள கருத்திட்டங்களிற்கு இங்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

கள விஜயங்களானவை ஏற்படப்போகும் ஆபத்துக்களை முன்கூட்டியே அடையாளம் காணுதல், முடிவுகளை சரிபார்த்தல், சரியான நேரத்தில் தலையீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் குடிமக்களை மையமாகக் கொண்ட விளைவுகளுக்கு நேரடியாகப் பங்களித்தல் போன்றவற்றில் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் திறன்களை வலுப்படுத்தியுள்ளது.

2025 ஆம் ஆண்டில், ஆபத்து நிலையில் காணப்பட்ட கருத்திட்டங்களில் 37 கள விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன, இக் கள விஜயங்களின் நோக்கம் ஆனது, அங்கீகரிக்கப்பட்ட கால வரையறை, வரவு செலவுத் திட்டங்கள் மற்றும் தர அளவுகோல்கள், உறுதிப்படுத்தப்பட்ட வளப் பயன்பாடு மற்றும் செயற்பாட்டு செயற்திறன் ஆகியவற்றுடன் இணங்குவதை மதிப்பிடுவதுடன், பயனாளிகள் மற்றும் உள்ளூர் பங்குதாரர்களுடன் நேரடியாக தொடர்புபடுகின்றன. களப் பயணங்கள் அபாயங்களை முன்கூட்டியே அடையாளம் காணவும், வெளியீடுகளை சரிபார்க்கவும், சரியான நேரத்தில் தலையீடுகளை ஆதரிக்கவும், குடிமக்களை மையமாகக் கொண்ட விளைவுகளுக்கு நேரடியாக பங்களிக்கவும் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் திறனை வலுப்படுத்தியுள்ளன. இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 37 களப் பயணங்களின் போது 60 கருத்திட்டங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. மேலும் கள அவதானிப்புகள், அறிக்கைகள் மற்றும் சேகரிக்கப்பட்ட தரவுகளின் படி அபிவிருத்திக் கருத்திட்ட பிரச்சினைகளினைத் தீர்க்க திணைக்களம் ஒரு சிறப்புப் பணியை மேற்கொண்டது. அதன்படி கள ஆய்வுகளின் போது எடுக்கப்பட்ட சில புகைப்படங்கள் இந்த அறிக்கையின் 47 முதல் 51 பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

| அட்டவணை 2.2: முன்னேற்றங்களை கள விஜயத்தினூடாக கண்காணித்தல் (01.01.2025 இலிருந்து 31.12.2025 திகதி வரை) | | | |
|---|---|---|---|
| **துறை/ களம்** | **கள கண்காணிப்புக்காக திட்டமிடப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை** | **கள கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை** | **தொடர்புடைய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட கண்காணிப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை** |
| கல்வி, உயர் கல்வி, திறன் அபிவிருத்தி, பாதுகாப்பு மற்றும் இடர் முகாமைத்துவம், சமூகப் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் | 04 | 08 | 08 |
| விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம் | 05 | 05 | 05 |
| சுகாதாரம், இளைஞர் மற்றும் விளையாட்டு | 04 | 12 | 12 |
| வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் நீதி | 03 | 04 | 04 |
| நகரம் மற்றும் போக்குவரத்து | 05 | 05 | 05 |
| நீர்த் துறை | 01 | 01 | 01 |
| நெடுஞ்சாலை துறை | 09 | 18 | 18 |
| சக்தி மற்றும் வலுசக்தி | 01 | 01 | 01 |
| பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், சமயம், கலாச்சாரம், உள்ளூராட்சி, மகளீர் அலுவல்கள் | 05 | 06 | 06 |
| **மொத்தம்** | **37** | **60** | **60** |

**விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம்**

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு திட்டம்

வெமிடில்ல எல்பி பிரதான கால்வாய்





களுகங்கை - மொரகஹாகநத இடமாற்றக் கால்வாய் (திறந்த கால்வாய்)





பலுகஸ்வேவ, பிரதான சுரங்கப்பாதை





மினிப்பே இடது கரை கால்வாயினை உயர்த்துதல்





உருகுணை கராப்பிட்டிய மருத்துவமனை பல்கலைக்கழகத்தில் பேராசிரியப் பிரிவினை அமைத்தல்





உருகுணை பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கான பன்னிரண்டு மாடி கட்டிடம் அமைத்தல்





தொழில்நுட்பப் பிரிவுக்கான தேசியக் கல்விக் கல்லூரியை நிறுவுதல் (GOSL/ KOICA)





அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மனித வள மேம்பாட்டுக் (STHRD) கருத்திட்ட
தொழில்நுட்பப் பீடங்கள் - ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை, அனுராதபுரம்





**சுகாதாரம் மற்றும் கல்வி / இளைஞர் மற்றும் விளையாட்டு**

தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவமனைகளின் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் – மீரிகம





விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு - மாகாண மற்றும் மாவட்ட விளையாட்டு வளாகங்களின் கட்டுமானம், கம்பஹா.




**போக்குவரத்து / நெடுஞ்சாலைகள் / துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து**

மூலோபாய நகரங்களின் மேம்பாடு – அனுராதபுரம் (AIUDP)




கிழக்கு முனையம் கட்டம் II துறைமுகம்




**பிராந்திய, மாகாண அபிவிருத்தி மற்றும் பொது நிர்வாகம்**

நகரத்தக்கூடிய பெட்டக கட்டமைப்பினை நிறுவுதல் (Installment)




மாநகர கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முதலீட்டு திட்டம் - பிரிவு 3 (EIB) நாராஹேன்பிட்ட





மாநகர கொழும்பு குடிநீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முதலீட்டு திட்டம் - கிருலப்பனை





மாநகர கொழும்பு முகாமைத்துவக் கருத்திட்ட கழிவுநீர் உந்து நிலையம்





**சக்தி மற்றும் வலுசக்தி**

ஹம்பாந்தோட்டை - துணைமின்நிலையத்தில் மின்கல சேமிப்பு அமைப்பை நிறுவுதல்.





## 2.3 விஷேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துதல் மற்றும் அபிவிருத்திப் பங்குதாரர்களிற்கு வசதிகளினை வழங்குதல்

நிரல் அமைச்சுக்களின் உத்தியோகத்தர்கள், கருத்திட்ட பணிப்பாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அபிவிருத்தி தரப்பினர் மற்றும் நிதி அமைச்சின் ஏனைய திணைக்களத்தின் பிரதிநிதிகளின் பங்குபற்றலினூடாக காணி கையகப்படுத்தும் நடவடிக்கைகளை விரைவுபடுத்தல், பெறுகை நடைமுறையினை விரைவுபடுத்தல் மற்றும் நிறுவனங்களுக்கு இடையிலான பிரச்சினைகளைத் தீர்ப்பது போன்ற அபிவிருத்தி கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான அடிப்படை நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் சிறப்பாக செயற்படுவதற்கான யோசனைகள் மற்றும் முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதன் மூலம் தொர்ச்சியான வசதிகளை வழங்குவதற்காக இத் திணைக்களம் சிறப்புக் கூட்டங்களை நடாத்தியுள்ளது. மேலும் ஏனைய நிறுவனங்கள் நடாத்தும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பான கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களிலும் இத் திணைக்கள அதிகாரிகள் பங்கேற்றனர்.

கருத்திட்டங்களை விரைவுபடுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திப் பிரதிபலன்களை உரிய காலத்தில் அடைந்துகொள்வதனை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக அபிவிருத்திப் பங்காளர்களுடன் வருடாந்தம் நடாத்தப்படும் மீளாய்வுச் செயற்பாட்டின் மூலம் அபிவிருத்திக் கருத்திட்டங்களை செயற்படுத்தும் போது அபிவிருத்திப் பங்காளர்களின் வசதிகளை வழங்கும் பணியும் இத் திணைக்களத்தின் வருடாந்த நிகழ்ச்சித் திட்டத்தினுள் காணப்படும் இன்னுமொரு பிரதான அம்சமாகும். அதற்கமைய 2025 ஆம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் உலக வங்கி (WB) உதவிகளின் அடிப்படையில் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களின் Portfolio முன்னேற்ற மீளாய்வு நடாத்தப்பட்டது. அதனூடாக கருத்திட்டங்களில் காணப்படும் சவாலான பிரச்சினைகளை உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு உட்படுத்துவதனூடாக வினைத் திறன் மிக்க கருத்திட்ட முகாமைத்துவத்திற்கு பங்களித்துள்ளது.

**அட்டவணை 2.3 : 2025 இல் நடைபெற்ற கலந்துரையாடல் மற்றும் விஷேட கூட்டங்களை நடத்துதலின் முன்னேற்றம் (01.01.2025 இலிருந்து 31.12.2025 திகதி வரை)**

| கூட்டங்கள் / கலந்துரையாடல்களை வகைப்படுத்துதல் | எண்ணிக்கை |
|---|---|
| கருத்திட்ட பிரச்சினைகள் தொடர்பாக நிரல் அமைச்சுக்கள், கருத்திட்ட முகாமைத்துவம் அலகுகள் மற்றும் இத் திணைக்களத்துடன் நடாத்தப்பட்ட விஷேட கூட்டங்கள் | 15 |
| உதவி வழங்குனரின் மீளாய்வுக் கூட்டங்கள் | 23 |
| முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் | 48 |
| துறைசார் கூட்டங்கள் | 06 |
| அபிவிருத்தி தரப்பினருடனான கூட்டங்கள் | 48 |
| வழிநடத்தல் குழு / கருத்திட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்கள் | 78 |
| வேறு விஷேட கூட்டங்கள் / கலந்துரையாடல்கள் | 50 |

## 2.4 பொது முதலீட்டு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் குழு (PIMEC)

கருத்திட்டத்தின் செயற்றிறனை மீளாய்வு செய்வதற்கும், அதனை செயற்படுத்துவதில் உள்ள தடைகளைத் தீர்ப்பதற்கும், பொது முதலீட்டு முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள முக்கிய பங்குதாரர்களிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கும் ஒரு முறையான

பொறிமுறையாக பொது முதலீட்டு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் குழு (PIMEC) செயற்படுவது இந்த ஆண்டின் ஒரு பெரிய சாதனையாகும்.

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் (PFMA) படி பொது முதலீட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதில் இருந்து எழும் பிரச்சினைகள் குறித்து விரைவான முடிவுகளை எடுக்க திட்டமிடல், வள ஒதுக்கீடு, வரவு செலவுத் திட்டம், நிதியுதலி மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றிற்குப் பொறுப்பான பதினொரு அதிகாரிகளைக் கொண்ட குழு அமைச்சரவையால் நியமிக்கப்பட்டு உள்ளது. இது தாமதங்களைத் தடுப்பதற்கும், எதிர்பார்க்கப்பட்ட பலன்களை பொதுமக்களுக்கு சரியான நேரத்தில் வழங்குவதை உறுதி செய்வதற்கும் ஆகும். பொது முதலீட்டு மேற்பார்வையின் முறையான பொறிமுறையாக மேற்கூறிய பொது முதலீட்டு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் குழு நிறுவப்பட்டதுடன், முன்னர் செயற்பட்ட தேசிய செயற்பாட்டு மையத்தின் (NOR) நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டு அதற்கு மாற்றப்பட்டன. பொது முதலீட்டு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் குழுவானது பொறுப்புக்கூறல், வெளிப்படைத் தன்மை மற்றும் குடிமக்களை மையமாகக் கொண்ட முதலீட்டு விளைவுகளை வலுப்படுத்தல், பொதுமக்களுக்கு கருத்திட்டங்களின் உச்ச நன்மைகள் வழங்குதல் என்பவற்றை உறுதி செய்கிறது. அத்துடன் 2025 ஆம் ஆண்டில், PIMEC கூட்டங்களின் 21 அமர்வுகள் நடைபெற்றுள்ளன. அவ்வகையில், குழுவின் தலையீடுகள் மற்றும் வழங்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.4 : 2025 இல் PIMEC குழுவின் தலையீடுகள் மற்றும் வழங்கப்பட்ட தீர்மானங்கள் செயற்படுத்தப்படுவதன் முன்னேற்றங்கள் (01.01.2025 இலிருந்து 31.12.2025 திகதி வரை)**

| பிரச்சினைகளை வகைப்படுத்தல் | கருத்திட்ட எண்ணிக்கை |
|---|---|
| உள்நாட்டு / வெளிநாட்டு நிதியினை விடுவித்தல் | 18 |
| கடன் ஒப்பந்தங்கள் / கருத்திட்டங்களுக்கு கால நீடிப்பினை பெற்றுக்கொள்ளுதல் | 6 |
| செலவு மதிப்பீட்டுத் திருத்தம் | 1 |
| ஒப்பந்த முகாமைத்துவம் | 2 |
| கருத்திட்ட முகாமைத்துவ அலகுக்குரிய ஆளணியினர் | 6 |
| காணிகளை சுவீகரித்துக்கொள்ளல் | 2 |
| பங்குதாரர்களிடையே ஒருங்கிணைப்பு | 9 |
| கருத்திட்டங்களின் காலப் பகுதிக்கு ஏற்ப நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்தல் | 3 |
| ஏனையவை | 4 |

## 2.5 கருத்திட்ட மதிப்பாய்வு / சான்றுகளின் அடிப்படையிலான தீர்மானம் எடுத்தல்

கருத்திட்ட மதிப்பாய்வு மற்றும் சான்றுகள் அடிப்படையிலான தீர்மானம் எடுத்தலானது பொது துறையினுள் தேசிய மதிப்பீட்டு கொள்கைக் கட்டமைப்பை (National Evaluation Policy Implementation Framework - NEPIF) ஊக்குவிப்பதிலும் செயற்படுத்துவதிலும் இத் திணைக்களம் முக்கிய பங்கு வகிக்கின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும் வகையில், திணைக்களமானது கருத்திட்ட மற்றும் நிகழ்ச்சித் திட்ட மதிப்பீடுகளை மேற்கொள்ளுவதுடன் மற்றும் அதற்கு வசதியும் அளிக்கின்றது. மேலும் கருத்திட்ட திட்டமிடல், வடிவமைப்பு, நிதி மற்றும் செயற்படுத்தல் செயன் முறைகளை வலுப்படுத்த பரிந்துரைகளை

வழங்குகின்றது. இம் மதிப்பீட்டு வெளியீடுகள், கொள்கை ஒத்திசைவு, நிறுவன செயற்றிறன் மற்றும் நீண்டகால அபிவிருத்தி விளைவுகளை மேம்படுத்துவதன் மூலம் நிலையான அபிவிருத்தியிற்குத் துணை நிற்கின்றன. கருத்திட்ட மற்றும் நிகழ்ச்சித் திட்ட மதிப்பீடுகள் அபிவிருத்தி தலையீடுகளின் செயற்றிறன், வினைத்திறன் மற்றும் நிலைபேறான தன்மையினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளக்கூடியதும் மற்றும் உண்மைத் தன்மையான ஆதாரங்களை உருவாக்குகின்றன. அவை கடந்தகால அனுபவங்களின் ஊடாக கற்றுக்கொண்ட பாடங்களை கவனத்தில் கொண்டு, சிறந்த நடைமுறைகளை ஊக்குவிக்கவும், கடந்தகால அனுபவங்களை எதிர்கால கருத்திட்டத்திட்டத்துடன் முறையாக ஒருங்கிணைக்கவும் உதவுகின்றதுடன், இதன் மூலம் தொடர்ச்சியான செயற்படுத்தலில் உள்ள பலவீனங்களை குறைத்து, பொது முதலீட்டு முகாமைத்துவத்தின் ஒட்டுமொத்த தரத்தினை வலுப்படுத்துகின்றன.

தேசிய மதிப்பீட்டு வழிநடத்தல் குழுவானது (National Evaluation Steering Committee - NESC) நிதி அமைச்சின் செயலாளரால் தலைமை தாங்கப்படுகிறது. NESC இன் ஒழுங்கமைப்பு பின்வருமாறு:

i. தேசிய திட்டமிடல், வெளிநாட்டு வளங்கள், தேசிய வரவு செலவுத் திட்டம், பொது நிறுவனங்கள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு ஆகிய திணைக்களங்களின் தலைவர்கள் (நிரந்தர உறுப்பினர்கள்)
ii. நிதி ஆணைக்குழுவின் செயலாளர் (நிரந்தர உறுப்பினர்)
iii. மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் மாவட்ட நிர்வாகம் தொடர்பான அமைச்சுகளின் செயலாளர்கள் (நிரந்தர உறுப்பினர்கள்)
iv. ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகத்தின் மூத்த பிரதிநிதிகள் (நிரந்தர உறுப்பினர்கள்)
v. நிரல் அமைச்சுகளின் செயலாளர்கள் (அழைப்பின் பேரில்)
vi. தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் மூத்த பிரதிநிதி (அவதானிப்பாளர்)

மேலும், ஏனைய தொடர்புடைய திணைக்களம், அரசுடைமை நிறுவனம், மாகாண சபை, மாவட்ட நிர்வாகம், உள்ளூராட்சி அமைப்பு அல்லது எனைய நிறுவனம், நிபுணத்துவ அமைப்பு அல்லது நிறுவனம் போன்றவை NESC கூட்ட நிகழ்ச்சி நிரலில் உள்ள கலந்துரையாடல்களிற்கு ஆதரவளிக்கும் வகையில், அவற்றின் தொடர்புத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு அழைப்பின் பேரில் NESC உறுப்பினராக இணைக்கப்படலாம்.

மேலும், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களமானது ஆனது NESC இன் செயலகமாகச் செயற்படுகிறது.

மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்ட ஆண்டில், 13 நிரல் அமைச்சுகள் மற்றும் 6 மாகாண சபைகளிடமிருந்து மொத்தம் 23 மதிப்பீட்டு முன்மொழிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. தொழில்நுட்ப மீளாய்வு செயல்முறையைத் தொடர்ந்து, 2025 ஆம் ஆண்டில் செயல்படுத்துவதற்காக 14 முன்னுரிமை அடிப்படையிலான மதிப்பீடுகள் தெரிவு செய்யப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட மதிப்பீடுகளில், "மாநகர குருணாகல் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் கருத்திட்டம்", "பதுளை - செங்கலடி வீதி மேம்பாட்டுக் கருத்திட்டம்" மற்றும் "காட்டின் பரப்பளவினை அதிகரிப்பதற்கான சமூக பங்கேற்பு கருத்திட்டம்" ஆகிய மூன்று கருத்திட்டங்களிற்கான இறுதி மதிப்பீட்டு அறிக்கைகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டன. ஏனைய மதிப்பீடுகளாக இவ் ஆண்டில் சுற்றாடல், மகளீர் மற்றும் சிறுவர் அலுவல்கள், கமத்தொழில், நீரியல், கிராமிய அபிவிருத்தி, கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் மாகாண மட்ட வாழ்வாதாரம் போன்ற முக்கிய துறைகளில் மதிப்பீடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும், தெரிவு செய்யப்பட்ட மாகாண மட்டததின் கருத்திட்டங்களுக்கான இறுதி மதிப்பீட்டு அறிக்கைகள் அறிக்கையிடல் காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்டன. 2025 ஆம் ஆண்டில் மதிப்பீட்டு மேற்கொள்வதற்குப் போதுமான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும்

கண்காணிப்பு திணைக்களத்தின் மதிப்பீட்டு செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக மொத்தம் ரூ. 34.82 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன், இதனுள் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கான உள்நாட்டு வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளும், ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்க உறுதியளித்த நிதி உதவியும் உள்ளடங்கும்.

2026 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டு திட்டத்தினைப் பொறுத்தவரையில், 15 மதிப்பீட்டு முன்மொழிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டு, திணைக்கள மதிப்பீட்டு குழுவினால் ஆய்வு செய்யப்பட்டன. வழங்கப்பட்ட பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு, தேசிய மதிப்பீட்டு வழிநடத்தல் குழு (NESC) 2026 ஆம் ஆண்டில் 9 மதிப்பீடுகளை செயற்படுத்த அனுமதி அளித்ததுடன். அவை மூன்று அமைச்சு மட்ட மதிப்பீடுகளையும் ஆறு மாகாண சபை மட்ட மதிப்பீடுகளையும் உள்ளடக்கியவை ஆகும். இதன்படி, 2026 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்காக உள்நாட்டு நிதியிலிருந்து ரூ. 19.1 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், தேசிய மதிப்பீட்டு திட்டத்திற்கு தந்திரோபாய வழிகாட்டுதலும் மேற்பார்வையும் வழங்குவதற்காக NESC, 2025 ஜூலை 29 மற்றும் 2025 டிசம்பர் 09 ஆகிய திகதிகளில் இரண்டு கூட்டங்களை குறித்த ஆண்டிற்குள் நடாத்தியது.

மேலும், 2025 மார்ச் 11 மற்றும் 12 ஆகிய தேதிகளில் Sri Lanka Foundation Institute இனால் இரண்டு நாள் வதிவிடம் அற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. இதில் 11 துறைசார் அமைச்சுகள், 3 மாகாண சபைகள் மற்றும் இத்திணைக்களத்தினைச் சார்ந்த அதிகாரிகள் உள்ளடங்கலாக மொத்தம் 44 அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**அட்டவணை 2.5 : தேசிய மதிப்பீட்டு கொள்கையினை செயற்படுத்தும் கட்டமைப்பை செயற்படுத்துவதில் முன்னேற்றங்கள் (01.01.2025 இல் இருந்து 31.12.2025 வரை)**

| வகைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் | நடவடிக்கைகள் / சந்தர்ப்பங்கள் / பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| தேசிய மதிப்பீட்டு வழிகாட்டும் குழு | 43 பங்கேற்பாளர்கள் (2 கூட்டங்கள்) |
| 2025 ஆம் ஆண்டில் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்படுவதற்காக தேசிய மதிப்பீட்டு வழிகாட்டும் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு முன்மொழிவுகளின் எண்ணிக்கை | 3 |
| 2025 ஆம் ஆண்டில் மாகாண சபைகளினால் மேற்கொள்ளப்படுவதற்காக தேசிய மதிப்பீட்டு வழிகாட்டும் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு முன்மொழிவுகளின் எண்ணிக்கை | 6 |
| NEPIF குறித்து நடத்தப்பட்ட பயிற்றுநர்களுக்கான பயிற்சி (TOT) நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | 2 |
| NEPIF குறித்து நடத்தப்பட்ட TOT நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அதிகாரிகளின் எண்ணிக்கை | 125 |
| NEPIF குறித்து நடத்தப்பட்ட பொது விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | 1 |
| NEPIF குறித்து நடத்தப்பட்ட பொது விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அதிகாரிகளின் எண்ணிக்கை | 44 |
| 2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற மதிப்பீடுகள் (தெற்கு மாகாண சபையினால் நடத்தப்பட்ட ஊட்டச்சத்து மேம்பாட்டுக் கருத்திட்டம்) | 1 |

| அட்டவணை 2.5.2: 01.01.2025 – 31.12.2025 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திட்ட மதிப்பீடுகளின் முன்னேற்றம் | | | |
|---|---|---|---|
| **இல.** | **மதிப்பீட்டின் பெயர்** | **செயற்படுத்தும் நிறுவனம்** | **தற்போதைய நிலை** |
| 01 | மாநகர குருநாகல் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வடிகால் திட்டம் | வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சு | ADB நிதி உதவியுடன் இறுதி மதிப்பீட்டு அறிக்கை நிறைவு செய்யப்பட்டது |
| 02 | பதுளை–செங்கலடி வீதி அபிவிருத்தி கருத்திட்டம் | போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | ADB நிதி உதவியுடன் இறுதி மதிப்பீட்டு அறிக்கை நிறைவு செய்யப்பட்டது |
| 03 | வனப் பரப்பினை அதிகரிப்பதற்கான சமூக பங்கேற்பு நிகழ்ச்சித் திட்டம் | சுற்றாடல் அமைச்சு | ADB நிதி உதவியுடன் இறுதி மதிப்பீட்டு அறிக்கை நிறைவு செய்யப்பட்டது |
| 04 | வனவிலங்கு பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் வாழ்விட மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் | சுற்றாடல் அமைச்சு (வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்) | நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது |
| 05 | பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் நிகழ்ச்சித் திட்டம் | மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு | நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது |
| 06 | தம்புள்ளையில் 5000 மெட்ரிக் டன் விவசாயப் பொருட்களுக்கான வெப்பநிலை கட்டுப்பாட்டு சேமிப்பு நிலையத்தின் கட்டுமானம் | வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு | நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது |
| 07 | சார்க் கலாசார மையம் (மாத்தறை) கட்டுமானம் | புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது |
| 08 | வெல்லமன்கர புதிய மீன்பிடித் துறைமுகக் கருத்திட்ட கட்டுமானம் | கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு | இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது |
| 09 | சௌபாக்ய உற்பத்தி கிராமத் திட்டம் | கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது |

| | | | |
|---|---|---|---|
| 10 | தொழிற்பேட்டை அபிவிருத்தித் திட்டம் | கைத்தொழில் மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்தி அமைச்சு | நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது |
| 11 | சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கான கடன் நிகழ்ச்சித் திட்டம் | நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 2026 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்குப் பின்னர் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது |
| 12 | வடமத்திய மாகாணத்தின் நீர்த்தேக்கங்களில் உள்நாட்டு நன்னீர் மீன்பிடித்தல் ஊக்குவித்தல் | வடமத்திய மாகாண சபை | நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது |
| 13 | “அத்கம் பியச” களிமண் பொருட்கள் உற்பத்தி, ஆராய்ச்சி மற்றும் தளபாடங்கள் விற்பனை கண்காட்சி வளாக கட்டுமான கருத்திட்டம் | வடமேற்கு மாகாண சபை | இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது |
| 14 | கோழி வளர்ப்பிற்கான உள்ளீடுகளை வழங்கும் வாழ்வாதாரத்திற்கு உதவி வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் | வடக்கு மாகாண சபை | நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது |

### 2.6 பெறுபேற்று அடிப்படையிலான முகாமைத்துவம் : அமைச்சுக்களின் பெறுபேற்றுக் கட்டமைப்பு மற்றும் மதிப்பெண் அட்டை

மேலும் இவ் ஆண்டில், திணைக்களமானது பெறுபேற்று அடிப்படையிலான முகாமைத்துவ நடைமுறைகளை வலுப்படுத்தும் வகையில் இதற்காக, நிரல் அமைச்சுக்களின் பெறுபேற்றுக் கட்டமைப்பு (Ministerial Results Frameworks - MRFs) மற்றும் செயற்றிறன் மதிப்பெண் அட்டைகளைத் தயாரிப்பதற்காக நிரல் அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களிற்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கியது. இம் முயற்சியானது, தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகள், திணைக்களம் சார்ந்த நோக்கங்கள் மற்றும் கருத்திட்ட மட்ட பெறுபேறுகளிற்கு இடையிலான ஒத்திசைவை விருத்தி செய்தலுடன், செயற்றிறன் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடலின் தரம், ஒருமைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையையும் மேம்படுத்தியது. 2025 அக்டோபர் 7 ஆம் தேதி வெளியிடப்பட்ட 25/1802/804/215 என்னும் அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, 22 நிரல் அமைசசுக்களிற்கு MRFs மற்றும் செயற்றிறன் மதிப்பெண் அட்டைகளுக்கு அமைச்சரவை அனுமதி வழங்குவதற்கு DPMM அமைச்சரவைக்கு வசதியளித்ததுடன், இத் தரவின் அடிப்படையிலான தீர்மானம் எடுத்தல் சாத்தியமாவதுடன், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் உறுதி பெற்று, அரசு செலவினங்களின் செயற்றிறன் மேம்படுத்தப்பட்டு, நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மேம்படுத்தப்பட்டு, செயற்றிறன் அடிப்படையிலான கண்காணிப்பு கலாச்சாரத்தினை பொதுத்துறையில் ஊக்குவித்தல் மற்றும் நிரல் அமைச்சுக்களின் பணிப்பரப்பிற்கு ஏற்ப குடிமக்களுக்கு சேவை வழங்கலை மேம்படுத்தல் ஆகியவற்றிற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளது.

| அட்டவணை எண் 2.6 : அமைச்சு பெறுபேற்று கட்டமைப்பினைத் தயாரித்தல் (01.01.2025 தொடக்கம் 31.12.2025 வரை) | |
|---|---|
| **MRF தயாரித்தலின் நிலை** | **எண்ணிக்கை** |
| அமைச்சரவை அங்கீகரிக்கப்பட்ட மற்றும் இறுதி MRFs | 22 |
| **கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களின் வகைப்படுத்தல்** | **எண்ணிக்கை** |
| நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நிரல் அமைச்சு அதிகாரிகளுடன் இடம்பெற்ற கூட்டங்கள் | 03 |
| DPMM இல் MRF இனைத் தயாரிப்பது குறித்ததான கலந்துரையாடல் | 04 |
| MRF இனை நிறுவனமயமாக்கலுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 01 |
| **மொத்தம்** | **08** |

### 2.7 ஒருங்கிணைத்த காலாண்டு முன்னேற்ற மதிப்பீட்டுக் கூட்டங்கள் (IQPRMs)

கட்டமைப்புச் செய்யப்பட்ட கண்காணிப்பு ஏற்பாடுகள், முன்னேற்ற மதிப்பீட்டு பொறிமுறைகள் மற்றும் உள்ளக நிறுவனக் கட்டமைப்பின் ஒருங்கிணைப்பு போன்றவற்றின் ஊடாக திணைக்களம் செயலாக்க வினைத்திறனை மேம்படுத்த பொறுப்பினை வலுப்படுத்த மற்றும் பொதுத்துறைகளில் முதலீட்டில் பணத்திற்கான மதிப்பினை அதிகரிப்பதற்கு இது பங்களிக்கிறது. இதற்காக, இத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் நிரல் அமைச்சுக்கள் மற்றும் நிறைவேற்றும் நிறுவனங்களின் தீவிரமான பங்களிப்பினை ஏற்படுத்தும் வகையில் ஒருங்கிணைத்த காலாண்டு முன்னேற்ற மதிப்பீட்டு கூட்டங்களை (IQPRMs) அறிமுகப்படுத்தின. இக் கூட்டங்கள், பௌதீக மற்றும் நிதி முன்னேற்றத்தினை அறிந்துகொள்வதற்கும் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களிற்கு எதிராக செயற்றிறன் மதிப்பீடு, பிரதானமாக துறைகளில் காணப்படும் தனித்துவமான பிரச்சினைகளினை அடையாளம் காண்பதற்கு, வரையறுக்கபட்ட நேர மதிப்பீட்டுத் திட்டங்களை உறுதி செய்ய உதவின. IQPRMs தீர்மானங்களை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் மற்றும் விரைவான நடவடிக்கை மேற்கொள்ளவும் கருத்திட்டத்தின் பங்குதாரர்களினை ஒன்று சேர்க்கும் வாய்ப்பாகவும் இது அடையாளம் காணப்பட்டது. இதன் முக்கிய வெளிப்பாடுகளாக, ஒருங்கிணைக்கப்பட்ட முன்னேற்ற மதிப்பீடுகள், செலவுகளின் அதிகரிப்பு மற்றும் செயலாக்கத்தில் காணப்படும் தாமதங்களை முன்கூட்டியே அடையாளம் காணுதல், திட்டமிட்டப்பட்ட வெளிப்பாடுகள் மற்றும் வரவு செலவு ஒதுக்கீடுகள் இடையிலான இணக்கப்பாட்டினை அதிகரித்தல், மற்றும் செயற்றிட்டங்களை செயற்படுத்த வழங்கப்பட்ட பொறுப்புகளை ஆவணப்படுத்தல் போன்றவை காணப்படுகின்றன. இவற்றின் விளைவுகளாக செயன்முறைத் திட்ட செயற்பாட்டின் திறனை மேம்படுத்த, நிதி ஒழுங்கு வலுப்படுத்த, மற்றும் ஆதார அடிப்படையில் முகாமைத்துவ முடிவுகள் மூலம் பொது வளங்களை சிறப்பாகப் பயன்படுத்தவும் பங்களித்தது.

| அட்டவணை எண் 2.7: காலாண்டு அடிப்படையிலான ஒருங்கிணைந்த முன்னேற்ற மதிப்பாய்வு கூட்டங்களின் முன்னேற்றம் - 31.12.2025 | | | | |
|---|---|---|---|---|
| **தொடர் இல** | **அமைச்சு** | **முதலாவது கூட்டம் நடைபெற்ற திகதி** | **இரண்டாவது கூட்டம் நடைபெற்ற திகதி** | **ஒவ்வொரு அமைச்சிலும் நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை** |
| 1 | நெடுஞ்சாலைகள் அமைச்சு | 20/03/2025 | 1/8/2025 | 2 |
| 2 | போக்குவரத்து, துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு | 11/04/2025 | 14/8/2025 | 2 |
| 3 | நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு, வீடமைப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சு | 10/4/2025 | 19/09/2025 | 2 |
| 4 | பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு | 7/4/2025 | 22/10/2025 | 2 |
| 5 | கமத்தொழில் கால்நடை, வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு – கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரிவு | 25/03/2025 | 24/10/2025 | 2 |
| | கமத்தொழில் கால்நடை, வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு – காணி மற்றும் நீர்ப்பாசனம் | 28/03/2025 | 24/12/2025 | 2 |
| 6 | சுற்றாடல் அமைச்சு | 14/05/2025 | 11/11/2025 | 2 |
| 7 | கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு | 9/5/2025 | 16/12/2025 | 2 |
| 8 | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு | 30/05/2025 | 16/10/2025 | 2 |
| 9 | பாதுகாப்பு அமைச்சு – பாதுகாப்பு பிரிவு | 15/05/2025 | 29/09/2025 | 2 |
| | பாதுகாப்பு அமைச்சு - அனர்த்த முகாமைத்துவப் பிரிவு | 21/05/2025 | 30/09/2025 | 2 |
| 10 | பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு | 27/06/2025 | 21/10/2025 | 2 |
| 11 | வலுசக்தி அமைச்சு | 22/04/2025 | 20/08/2025 | 2 |
| 12 | வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு | _ | 3/10/2025 | 1 |
| 13 | கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு | 2/5/2025 | 8/09/2025 | 2 |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | தொழிலாளர் அமைச்சு | 13/06/2025 | 10/10/2025 | 2 |
| 15 | நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு | 20/05/2025 | 07/10/2025 | 2 |
| 16 | வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சு | 26/06/2025 | _ | 1 |
| 17 | நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சு | _ | 26/05/2025 | 1 |
| 18 | டிஜிட்டல் பொருளாதார அமைச்சு | 19/05/2025 | 28/11/2025 | 2 |
| 19 | மகளீர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு | 22/05/2025 | 28/08/2025 | 2 |
| 20 | புத்தசாசனம், சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு | 25/06/2025 | 24/12/2025 | 2 |
| 21 | பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | 17/05/2025 | 17/10/2025 | 2 |
| 22 | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு | 21/05/2025 | 12/09/2025 | 2 |
| 23 | கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | 24/06/2025 | 22/10/2025 | 2 |
| 24 | சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | 02/06/2025 | 18/09/2025 | 2 |
| 25 | இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு | 13/06/2025 | 15/09/2025 | 2 |
| **கூட்டங்களின் மொத்த எண்ணிக்கை** | | **25** | **26** | |
| | | **51** | | **51** |

### 2.8 வரவு செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகளைக் கண்காணித்தல்

22.03.2025 திகதி அன்று நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைசசின் செயலாளரால் வெளியிடப்பட்ட வரவு செலவுத் திட்ட மேம்படுத்தல் சுற்றறிக்கை எண். 01/2025 இன் படி, இத் திணைக்களம் அதன் வழமையான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு செயற்பாடுகளுடன் இணைந்து, வரவு செலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்ட 54 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் செயற்படுத்தல் முன்னேற்றத்தை கண்காணிப்பதுடன், அதனை பின்தொடர வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகள், செயற்படுத்தலின் முன்னேற்றம் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட முடிவுகள் ஆகியவற்றுக்கிடையிலான ஒத்திசைவை உறுதிசெய்ய, தெளிவாக வரையறுக்கப்பட்ட அறிக்கை சமர்ப்பிப்பு தேவைகள் மற்றும் பின்னூட்டல் நடவடிக்கைகளுடன் கட்டமைக்கப்பட்ட மாதாந்த மீளாய்வுக் கூட்டங்கள் மூலம் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது.

இவ் மாதாந்த மதிப்பாய்வுகள், திட்டமிடப்பட்ட வெளியீடுகள் மற்றும் முக்கிய இலக்குகளுடன் ஒப்பிட்டு முன்னேற்றத்தினை மதிப்பிடுதல், கால அட்டவணைகளிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகளின் விலகல்களினைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை அடைவதில் பாதிப்பினை ஏற்படுத்தும் அபாயங்களினை அடையாளம் காணுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றன. இச் செயன்முறையானது செயற்படுத்தலில் உள்ள கட்டுப்பாடுகளை ஆரம்பத்திலேயே அடையாளம் காண உதவியதுடன், அதனுடன் தொடர்புடைய நிரல் அமைச்சுக்கள் மற்றும் செயற்படுத்தும் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பின் மூலம் சரியான நேரத்தில் திருத்த நடவடிக்கைகளை எடுப்பதற்கு வசதியாக அமைந்தது.

அதன்படி இக் கண்காணிப்பு அணுகுமுறையின் விளைவாக, விளைவுகளிற்கான பொறுப்புணர்வை வலுப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவம் மற்றும் கொள்கை நிலை தீர்மானங்களுக்கு தேவையான உள்ளீடுகளை வழங்குதல் என்பன ஊடாக திணைக்களத்தின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் செயற்படுத்தல் செயற்திறன் குறித்து புதுப்பிக்கப்பட்ட முழுமையான கண்ணோட்டத்தை பராமரிக்க முடிந்தது. அந்தவகையில், வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் கண்காணிப்பானது, வரவு செலவுத் திட்ட முயற்சிகளின் சிறந்த செயற்படுத்தலுக்கு பங்களித்ததுடன், கொள்கை ரீதியான கடமைகளை அளவிடக்கூடிய அபிவிருத்தி விளைவுகளாக மாற்றுவதற்கு உதவிபுரிந்தது.

### 2.9 கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பணிக்குழுவினை அமைத்தல்

பொதுத்துறை முழுவதும் ஒருங்கிணைப்பு, நிறுவனத் திறன் மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (M&E) நடைமுறைகளில் நிலைத்தன்மையை வலுப்படுத்துவதற்காக, ஒரு பிரத்தியேக கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு செயற்பாட்டுக்குழு ஆனது ஒரு தேசிய கூட்டு தளமாக முறையாக நிறுவப்பட்டது. இப் பணிக்குழுவானது அனைத்து நிரல் அமைச்சுக்களின் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) மற்றும் ஒன்பது மாகாண சபைகளின் பிரதி பிரதம செயலாளர்கள் (திட்டமிடல்) ஆகியோரை ஒன்றிணைப்பதுடன், இதன் மூலம் தேசிய மற்றும் பிராந்திய நிலைகளில் முழுமையான பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்படுகிறது. இதனை செயற்படுத்தும் போது எதிர்கொள்ளும் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு தொடர்பான பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளவும், குறிப்பாக திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு தொடர்பான தொடர்பு மையப் பொறுப்புகள் குறித்து நடைமுறைத் தீர்வுகளை அடையாளம் காணவும் ஒரு கட்டமைக்கப்பட்ட அமைப்பாக செயற்படுகிறது.

இப் பணிக்குழுவின் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தும் ஒரு பகுதியாக, சர்வதேச அபிவிருத்தி பங்காளிகளின் தொழில்நுட்ப உதவியுடன், நடப்பு ஆண்டில் 63 அதிகாரிகளுக்காக திறன் மேம்பாட்டு பயிற்சிகள் இரண்டு தடவைகள் நடாத்தப்பட்டன. மேலும் இப் பயிற்சிகளின் மூலம், விளைவுகள் அடிப்படையிலான கண்காணிப்பு, மதிப்பீட்டு முறைமைகள், மற்றும் தீர்மானம் எடுப்பதற்கான மதிப்பீட்டு முடிவுகளினைப் பயன்படுத்துதல் போன்றவை குறித்து தொழில்நுட்ப அறிவை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தின. கூடுதலாக, இவ் அமர்வுகள் மூலம் அனுபவப் பகிர்வு, பொதுவான சவால்கள் குறித்ததான கலந்துரையாடல், மற்றும் அமைசசுக்கள் மாகாணங்கள் என்பவற்றிக்கு இடையே சிறந்த நடைமுறைகளை பரப்புவதற்கான ஒரு தளத்தையும் வழங்கியுள்ளன.

### 2.10 அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் வருடாந்த நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்றிறனினை வெளியிடுதல்

பொது வளங்களை வினைத்திறனாகவும், விளைதிறனாகவும் மற்றும் கூடிய பயனினைப் பெறும் முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்வது, சிறந்த பொது முதலீட்டு முகாமைத்துவம் மற்றும் நிதி ஒழுங்கிற்கான அடிப்படைத் தேவையாகும். இச் சூழ்நிலையில், அங்கீகரிக்கப்பட்ட செலவு, காலம் மற்றும் தர அளவுகோல்களிற்குள் நாடு முழுவதும் செயற்படுத்தப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளினை அடைவதும், மற்றும் பொது நிதி முகாமைத்துவத்தினை வலுப்படுத்தவும், அபிவிருத்தி தாக்கத்தினை அதிகப்படுத்தலும் அவசியமாகும்.

செயற்றிறன் வாய்ந்த கருத்திட்ட முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறைமைகள் மூலம் செயற்படுத்தல் முன்னேற்றத்துடன் தொடர்புடைய பங்குதாரர்களுக்கு காலதாமதமின்றி அறிக்கை செய்வதை இயலுமைப்படுத்துகின்றன. அதே நேரத்தில்

செயற்படுத்தலில் ஏற்படும் தடைகள், ஆபத்துக்கள் மற்றும் ஏற்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஆதாரத்தின் அடிப்படையிலான தீர்மானங்கள் உதவுகின்றன. இந் நோக்கங்களை அடைவதற்காக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிமூலம் நிதியளிக்கப்படும் பொது முதலீட்டுக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் சீராகவும் காலத்திற்குள் செயற்படுத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களமானது மூலோபாய மேற்பார்வை, தொழில்நுட்ப வழிகாட்டுதல், ஒருங்கிணைப்பு மற்றும் வசதிகளை வழங்குகிறது. அதன்படி, அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்றிறன் குறித்த காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள், இத் திணைக்களத்தின் பரிந்துரைகளுடன் அமைச்சரவை முன் சமர்ப்பிக்கப்பட்டன.

கருத்திட்டங்களின் முன்னேற்றங்கள் அதனுடன் தொடர்புடைய கொள்கை உருவாக்குபவர்கள் மற்றும் நிதியுதவி வழங்கும் நிறுவனங்களிடையே பகிரப்பட்டதுடன், அதன் பின்னர் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் இணையத் தளத்திலும் (www.treasury.gov.lk) வெளியிடப்பட்டுள்ளதனால், பொதுமக்கள், பொது அமைப்புகள் மற்றும் ஏனைய ஆர்வமுள்ள தரப்பினர் போன்றவர்கள் பொது செலவுகள், வளங்களின் பயன்பாட்டின் வினைத்திறன் மற்றும் விளைதன்மையினை அறிந்துகொள்ள முடிந்தது.

# அத்தியாயம் 3 – வருடத்தின் மொத்த நிதி செயற்றிறன்

## 3.1 பாதீட்டு தகவல்

